# அறந்தாங்கி நகராட்சி

## நகர்மன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

**ஸ்ரீ ப்லவ வருடம் ஐப்பசி மாதம் 12—ஆம் நாள் அக்டோபர் மாதம் 29.10.2021ம் நாள் வெள்ளிக் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற உள்ள சாதாரண கூட்ட பொருள் விபரம்**

| | | |
|---|---|---|
| **பொருள் எண். 1** | நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையர் (பொ) அவர்களின் செப்டம்பர்— 2021ம் மாதத்திற்கான நாட்குறிப்பு பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:—**<br><br>பதிவு செய்யலாம் | **தீர்மான எண்:—** 116<br>**தீர்மானம்:—** பதிவு செய்யப்பட்டது |
| **பொருள் எண். 2** | இந்நகராட்சியில் கருணை அடிப்படையில் பணி வழங்க கோரி திரு.அ.சாப்ஜான் த/பெ. ச. அக்பர்அலி (லேட்) என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண்.WPNo.19259/2017ல் இந்நகராட்சி சார்பாக ஆஜரான வழக்கறிஞர் திரு.ஒ.செல்வம்,எம்.ஏ.,எம்.பில்.,பி.எல்., அவர்களுக்கு வழக்கறிஞர் கட்டணமாக வழங்க உண்டான செலவினம் ரூ.15,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:—**<br><br>1) மன்றம் அனுமதிக்கலாம்<br>2) அவசர அவசியம் கருதி வழக்கறிஞர் கட்டணமாக ரூ.15,000/— திரு.ஒ. செல்வம், எம்.ஏ., எம்.பில்., பி.எல்., அவர்களுக்கு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்:—** 117<br>**தீர்மானம்:—** அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| **<u>பொருள் எண். 3</u>** | இந்நகராட்சி பகுதியில் பள்ளிகள் எதிர்வரும் நவம்பர் 1 முதல் திறக்கப்பட உள்ளதால் மேற்கு பள்ளி வளாகத்தில் மழையின் காரணமாக மழை நீர் தேங்கி உள்ளதால் மாணவர்கள் நலன் கருதி தளத்தினை மேம்படுத்திடவும் சேறு சகதியாக உள்ளதனை கிராவல் மற்றும் WMM Mix கொண்டு ஒழுங்கு படுத்திடவும் மேலும் தேவையான பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கும் அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.5.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு</u> –**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி செலவினம் ரூ.5.00 லட்சத்தை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதனை மன்றம் அங்கீகரிக்கலாம். | **<u>தீர்மான எண்:–</u> 118**<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலக குறிப்பு 1 ,2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது |
| **<u>பொருள் எண். 4</u>** | இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு வாகனங்கள் பராமரிப்பு பணி மற்றும் தகுதிச்சான்று பெறுவதற்கான பழுதுகளை நீக்கம் செய்யும் பணி மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்–23 நாள்:30.06.2020ல் ரூபாய் 10.00 லட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது, மேற்கண்ட அனுமதிக்கப்பட்ட செலவீனத் தொகையில் TN-55-AT 9117 JCB வாகனத்திற்கு பழுதுநீக்கம் செய்யும் பணிக்கு கடந்த 28.09.2021 அன்று ரூ.1,84,519/– க்கு விலைப்புள்ளி பெறப்பட்டு தனிஅலுவலரின் முன்அனுமதி பெறப்பட்டு வேலை உத்திரவு வழங்கப்பட்டது. தற்போது பழுது நீக்கம் செய்யும் பணியின் போது கூடுதலாக சில பழுதுகள் ஏற்பட்டதால் அதனையும் சரிசெய்து தற்போது ரூ.197382/– பட்டியல் வரப்பட்டுள்ளதில் கூடுதல் செலவினம் ரூ.13313/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | **<u>தீர்மான எண்:–</u> 119**<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலகக்குறிப்பு:–</u>**<br><br>1. கூடுதல் செலவினத்தினை அனுமதிக்கலாம்<br>2. பொது சுகாதாரப்பிரிவின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகையினை வழங்க மன்றம் ஏற்கலாம் (ந.க.எண்.03563/2019/எச்1) | |
| **<u>பொருள் எண். 5</u>** | இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வரும் தள்ளுவண்டிகளில் (PushCart) டயர், வீல், பெட், பேரிங் போன்றவை பழுது ஏற்பட்டு பயன்படுத்த இயலாத நிலையில் 40 வண்டிகள் உள்ளது. மேற்கண்ட பழுதுகளை சரி செய்திடவும், உதிரி பாகங்கள் வாங்கி பொருத்திடவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00 லட்சத்தை பொது நிதியிலிருந்து செலவுகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:–</u>**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 4920/2021/எச்1) | **<u>தீர்மான எண்:–</u>** 120<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| **<u>பொருள் எண். 6</u>** | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட புதுக்கோட்டை ரோடு கலவை உரக்கிடங்கில் சேகரிக்கப்பட்டுள்ள பிளாஸ்டிக் கழிவுகளை அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலைக்கு கொண்டு செல்வதற்கு 10 முதல் 18 டயர்கள் கொண்ட பெரிய லாரிகளில் ஏற்றி செல்ல வசதியாக கலவை உரக்கிடங்கின் சுற்றுச்சுவரை இடித்து அப்புறப்படுத்தி கொள்ள மதிப்பீடு ரூ.6000 /– (ரூபாய் ஆறாயிரத்துக்கு மட்டும் ) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:–</u>**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி பொதுப்பணித்துறை 2021–2022ஆம் ஆண்டின் | **<u>தீர்மான எண்:–</u>** 121<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலக குறிப்பு 1 ,2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | விலைப்பட்டியலின் படி நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் மூலம் ஒப்படைப்பு பணியாக மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மதிப்பீட்டு விலை விகிதத்தில் இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.ஆர்.ராசு அவர்களிடம் ஒப்படைப்பு பணியாக செய்து முடித்ததை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 4047/2021/இ1) | |
| **<u>பொருள் எண். 7</u>** | இந்நகராட்சி வார்டு எண்.23 திருவள்ளுவர் தெரு குறுக்கு வீதி, மற்றும் வார்டு எண்.24 வடி வேல் பிள்ளை தெரு பகுதியில் வடிகால் இல்லாத காரணத்தால் பொதுமக்கள் மழைகாலங்களில் போக்குவரத்திற்கு மிகுந்த சிரமத்தை அடைவதாகவும், புதிதாக வடிகால் அமைக்க வழியுறுத்தி கோரிக்கைகள் வரப்பெற்றதை அடுத்து, மேற்படி பகுதியில் வடிகால் அமைக்க அனுமதிக்கும், அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.2.80 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:—</u>**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பொது நிதியில் இருந்து இப்பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.4233/இ1/2021) | **<u>தீர்மான எண்:—</u>** 122<br>**<u>தீர்மானம்:—</u>** அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |
| **<u>பொருள் எண். 8</u>** | இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள நகராட்சி பள்ளிகளில் பள்ளி மாணவர்களின் சேர்க்கை அதிகமானதன் காரணமாக பள்ளி வகுப்பறை கட்டிடங்கள் போதுமான அளவு இல்லை எனவும் கூடுதல் வகுப்பறைகள் கட்டித்தரவும், கழிப்பறை வசதியும் கூடுதலாக ஏற்படுத்தி தரவும் பராமரிப்பு மற்றும் பழுது பணிகள் மேற்கொள்ளவும் பள்ளியின் தலைமை ஆசிரியைகள் கோரியுள்ளதனை ஏற்றும் மாணவர்களின் நலன் கருதியும் கீழ்கண்டுள்ளவாறு பணிகள் மேற்கொள்ளவும் தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதிக்கு வேண்டப்படுகிறது. . | **<u>தீர்மான எண்:—</u>** 123<br>**<u>தீர்மானம்:—</u>** அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |

| வ.எண். | பணியின் விபரம் | மதிப்பீடு |
|---|---|---|
| நகராட்சி மேற்கு நடுநிலைப்பள்ளி | | |
| 1. | மேற்கு நடுநிலைப்பள்ளியில் ஸ்மார்ட் கிளாஸ் வசதியுடன் கூடிய கூடுதல் வகுப்பறை கட்டுதல் | 25.00 லட்சம் |
| 2. | மேற்கு நடுநிலைப்பள்ளியில் மாணவ மாணவியருக்கான சுகாதார வளாகம் அமைத்தல் | 10.00 லட்சம் |
| நகராட்சி எல்.என்.புரம் நடுநிலைப்பள்ளி | | |
| 1. | எல்.என்.புரம் நடுநிலைப்பள்ளியில் பராமரிப்பு மற்றும் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் | 5.00 லட்சம் |
| நகராட்சி கிழக்கு துவக்கப்பள்ளி | | |
| 1. | நகராட்சி கிழக்கு துவக்கப்பள்ளியில் பராமரிப்பு மற்றும் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் | 2.50 லட்சம் |

**அலுவலக குறிப்பு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி செலவினத்தை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
   (ந.க.எண். /2021/இ1)

<table>
<tr>
<td><u>பொருள் எண். 9</u></td>
<td><u>பொருள் எண். 9</u><br><br>இந்நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் புதுக்குளம், வெண்ணாவல் குளம், சூரியமூர்த்தி குளம் ஆகியவற்றை புனரமைக்கவும், வலுப்படுத்தவும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் அறிவுரைப்படி கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் விரிவான திட்ட அறிக்கை சமர்ப்பிக்க குளத்தினை பல்வேறு நிலைகளில் டிரோன் கேமரா மூலம் புகைப்படம் எடுத்து இணைக்கவும் அ4 அளவு புகைப்படங்களை பிரிண்ட் செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.5400/- க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலக குறிப்பு</u><br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்<br>3. பணியின் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரி பணி மேற்கொண்டதனை மன்றம் அங்கீகரிக்கலாம்.</td>
<td><u>தீர்மான எண்:–</u> 124<br><u>தீர்மானம்:–</u> அலுவலக குறிப்பு 1 ,2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td><u>பொருள் எண். 10</u></td>
<td>இந்நகராட்சி பகுதியில் பொது மக்கள் மற்றும் போக்குவரத்தின் நன்மை கருதி கீழ்கண்டுள்ளவாறு தேர்வு செய்யப்பட்டுள்ள பணிகளுக்கும் மதிப்பீட்டிற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்.</th><th>பணியின் விபரம்</th><th>மதிப்பீடு</th></tr>
<tr><td>1.</td><td>இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் புதிய பெயர் பலகை பொருத்துதல்</td><td>4.80 லட்சம்</td></tr>
<tr><td>2.</td><td>அரசு மருத்துவமனை அருகில் உள்ள பயனியர் நிழற்</td><td>0.30 லட்சம்</td></tr>
</table></td>
<td><u>தீர்மான எண்:–</u> 125<br><u>தீர்மானம்:–</u> அலுவலக குறிப்பு 1 ,2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | குடையில் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | |

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்
3. பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதனை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>பொருள் எண். 11</u>**

இந்நகராட்சி பகுதியில் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகத்தின் நலன் கருதி கீழ்கண்டுள்ளவாறு தேர்வு செய்யப்பட்டுள்ள பணிகளுக்கும் மதிப்பீட்டிற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பணியின் விபரம் | மதிப்பீடு |
|---|---|---|
| 1. | இந்நகராட்சி குடிநீர் விநியோகம் செய்யும் நிலையங்களுக்கு குடிநீரில் கலப்பதற்கு தேவையான திரவ ஹைப்போ குளோரின் சப்ளை செய்தல் | 9.50 லட்சம் |
| 2. | அறந்தாங்கி நகராட்சி குடிநீர் பராமரிப்பு பணிக்காக வெளிக்கொணர்வு முறையில் 3 நபர்களை அமர்த்தி பணி மேற்கொள்ளுதல் | 1.50 லட்சம் |

**<u>தீர்மான எண்:–</u>** 126

**<u>தீர்மானம்:–</u>** அலுவலக குறிப்பு 1 ,2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்
3. பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதனை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**பொருள் எண். 12**

இந்நகராட்சி பகுதியில் உள்ள சமுதாய மற்றும் பொது கழிவறைகளில் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள கீழ்கண்டுள்ளவாறு தேர்வு செய்யப்பட்டுள்ளதற்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கும், அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.14.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பணியின் விபரம் | மதிப்பீடு (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|
| 1. | வார்டு எண்.1 அண்ணா நகர் சமுதாய கழிப்பறை பழுது மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 4.00 |
| 2. | வார்டு எண்.23 வடக்கு வாடி சமுதாய கழிப்பறை பழுது மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 4.00 |
| 3. | வார்டு எண்.14 அவுலியா நகர் பொது கழிப்பறை பழுது மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 3.00 |
| 4. | வார்டு எண்.27 வீரமாகாளியம்மன் கோவில் தெரு (அருகன் குளக்கரை) பொது கழிப்பறை பழுது மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 3.00 |

**தீர்மான எண்:–** 127

**தீர்மானம்:–** அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலகக்குறிப்பு:–</u>**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பொது நிதியில் இருந்தோ அல்லது அரசின் ஏதேனும் ஒரு திட்ட நிதியிலிருந்தோ இப்பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.4328/இ1/2021) | |
| **<u>பொருள் எண். 13</u>** | இந்நகராட்சி வார்டு எண்.6 ரெங்கோஜிபாவா தெருவில் (காசி விஸ்வநாதர் ஆலயத்திற்கு எதிர் புறம்) நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் கூடுதல் பணிகள் மேற்கொண்டு பயன்பாட்டிற்கு கொண்டு வர அனுமதிக்கும், அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.10.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:–</u>**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பொது நிதியில் இருந்து இப்பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண். /இ1/2021) | **<u>தீர்மான எண்:–</u>** 128<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |

ஒம்/–செ.திருச்செல்வம்
தனி அலுவலர்
அறந்தாங்கி நகராட்சி